**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 108/2020 |
| Name | : Veerakumar |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**02.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தாராபுரத்தில் வசிக்கிறேன். டெம்போ ஓட்டி வருகிறேன். தேதி ஞாபகம் இல்லை சுமார் 6-7 வருடங்களுக்கு முன்பு மாலை நேரம் நான் தாராபுரத்தில் இருந்து உடுமலைப்பேட்டைக்கு எனது இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன் அப்போது பெரும்பள்ளம் ஆற்று பாலத்திற்கு அருகில் எனது சித்தப்பா திருமூர்த்தி மற்றும் பெரியப்பா துக்கையப்பன் இருசக்கர வாகனத்தில் அடிபட்டு கிடந்தார்கள். மருத்துவமனைக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். எனது பெரியப்பாவிற்கு காலிலும், சித்தப்பாவிற்கு உடலில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டிருந்தது. ஒரு கார் அங்கே நின்றிருந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 09.01.2019 ம் தேதி TN 78 B 1168 TVS Sport என்ற வாகனத்தில் திருமூர்த்தி என்பவரும், TN 42 J 6223 Bajaj Platina என்ற வாகனத்தில் துக்கையப்பன் என்பவரும் மதியம் 02.30 மணிக்கு உடுமலை – தாராபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது எதிரி செல்வ பழனிச்சாமி என்பவர் TN 78 9000 Maruthi swift என்ற காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் அதே ரோட்டில் மேற்படி நபர்களுக்கு பின்னால் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதை கண்ணுற்ற சாட்சியாக அதே சாலையில் சென்று கொண்டிருந்த நான் பார்த்ததாக போலீஸில் சொல்லிவிட்டு தற்போது பெய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.02 17:47:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்